# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## அம்பாறை, மாவட்டச் செயலகத்தில் முன்மொழியப்பட்ட மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல் – கட்டம் VI

1. அம்பாறை, மாவட்டச் செயலகத்தில் முன்மொழியப்பட்ட மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகளின் VIஆம் கட்ட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அம்பாறை மாவட்டச் செயலாளர் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் இப்போது அழைக்கப்படுகின்றன.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. செயற்றிட்ட கண்ணோட்டம் மற்றும் நோக்கம்
4. இந்த வேலைகளில் ஏறக்குறைய 2944m² மொத்தத் தரைப் பரப்பைக் கொண்ட தரைக்கீழ்த் தளம், தரைத் தளம், முதலாம் தளத்தை உள்ளடக்கிய மூன்று மாடிக் கட்டிடத் தொகுதியின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல் என்பன உள்ளடங்குகின்றன. தரைத் தளம், முதலாம் தளம், இரண்டாம் தளம் மற்றும் கூரை வேலைகள் என்பன ஏற்கனவே பூர்த்தியாகிவிட்டன. இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள வேலைகளில் பின்வரும் அட்டவணையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள வேலைகள் உள்ளடங்குகின்றன.
5. பிரதான ஒப்பந்தக்காரர் C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்ட ஒப்பந்தக்காரராக இருக்க வேண்டும் என்பதுடன் ஒட்டுமொத்த நோக்கத்திற்கும் பொறுப்பாளராவார். சகல விசேடத்துவ பொறிமுறை மற்றும் மின்சார (EM) வேலைகளையும் அளவுப் பத்திரத்தில் (BOQ) பட்டியலிடப்பட்டுள்ள EM தரத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள தகுதி வாய்ந்த உப ஒப்பந்தக்காரர்கள் மூலம் செயற்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

| வேலை தொகுதி | மதிப்பீட்டுக் கிரயம் (வெட் இன்றி) ரூபா |
|---|---|
| மிகுதி சிவில் வேலைகள் | 24,272,000.00 |
| வளிச்சீராக்கம் (VRF/VRV & Split) | 30,011,000.00 |
| மின்னுயர்த்தி (இயந்திர அறை - மின்னுயர்த்தி இன்றி) | 10,340,000.00 |
| மின்னல் பாதுகாப்பு முறை | 4,808,000.00 |
| தீ அலாரம் மற்றும் கண்டறியும் முறைமை | 2,426,000.00 |
| மொத்தம் | **71,857,000.00** |

6. திட்டத்தை நிறைவு செய்வதற்கான காலம் 210 நாட்களாகும்.
7. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருக்க வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.
   a. கட்டிட நிர்மாணத் துறையில் C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவைக் கொண்டிருக்க வேண்டும்.
   b. கடந்த 5 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட கட்டிட நிர்மாண வேலைகளின் வருடாந்த சராசரி புரள்வு 180 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
   c. கடந்த 5 வருடங்களில் இதற்கு நிகரான மற்றும் சிக்கல் தன்மையுடனான ஒரு திட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   d. இந்தத் திட்டத்திற்காக 30 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட கடன் வசதி கிடைப்பது குறித்து விலைமனுதாரரின் உத்தியோகபூர்வ வங்கியாளர்களிடமிருந்து அறிக்கை.
8. சகல ஆர்வமுள்ள தரப்பினரும் பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
9. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அம்பாறை, மாவட்டச் செயலகம், பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2026-02-03ஆம் திகதி முதல் 2026-02-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையில் மேற்கூறிய முகவரியில் பெறுகை ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
10. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 15,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி, 2026-02-03ஆம் திகதி முதல் 2026-02-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையில் அம்பாறை, மாவட்டச் செயலகம், பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான பெறுகை ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாக இருக்க வேண்டும்.
11. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், அம்பாறை எனும் முகவரிக்கு 2026-02-25ஆம் திகதி 10.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் ஒப்படைக்க வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடனடியாகத் திறக்கப்படும்.
12. விலைமனுக்கள் 2026-05-27ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
13. சகல விலைமனுக்களுடனும் 750,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி 2026-06-24ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
14. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று அம்பாறை மாவட்டச் செயலகத்தில் 2026-02-10ஆம் திகதி 14.00 மணித்தியாலத்தில் இடம்பெறும்.

**மாவட்டச் செயலாளர்,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**அம்பாறை.**
**2026-02-02.**